சென்னையிலும் உள்ள கல்லூரிகளில் இப்படி ஒதுக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகி மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது கோவை பி.எஸ்.ஜி கல்லூரியிலும் பகுதிநேர படிப்பு ஆரம்பிக்கின்ற யோசனை அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

ஆதம்பாக்கம் பகுதியிலுள்ள சாலைகள்

806. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த ஆதம்பாக்கம் பகுதியில் சாலைகள் மிகவும் மோசமான நிலையிலிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

(ஆ) வேளச்சேரி பஞ்சாயத்து யூனியன் இதுபற்றி எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆதம்பாக்கம் கிராமம் ஆலந்தூர் நகராட்சியின் பகுதி, அந்நகராட்சி சாலைகளுக்கு தார்தளம் அமைக்கும் வேலையை ஐந்தாண்டு திட்டப் பணியின் கீழ் மேற்கொண்டுள்ளது.

(ஆ) வேளச்சேரி நகரத்தில் பழுதடைந்துள்ள பஞ்சாயத்து சாலைகளைச் செப்பனிட மாவட்ட ஆட்சியர் அரசு வருவாய்த் துறையிடம் தொடர்பு கொண்டுள்ளார். அவசர நடவடிக்கையாக வேளச்சேரி நகர்ப் பஞ்சாயத்து மண் வேலை மற்றும் சிறு பள்ளங்களை நிரப்புதல் போன்ற வேலைகளைச் செய்து வருகிறது.

உதகை ஊராட்சி ஒன்றியம்

* 807. வினா—திரு. க. அரங்கசாமி ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை ஊராட்சி ஒன்றியத்தை, குந்தா ஒன்றியம், உதகை ஒன்றியம் எனப் பிரிக்கின்ற உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.